| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 000233 /NMMS /2022** **நாள் : 24.02.2022**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு, மார்ச் 2022 – நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – சார்பு.

------

05.03.2022 அன்று நடைபெறும் தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளியின் முதல்வர் / தலைமையாசிரியர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் மூலம் 25.02.2022 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதுகுறித்தான செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதனை தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் தங்கள் பத்திரிகையில் செய்தியாக வெளியிடுமாறும் வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**“இது விளம்பரம் அல்ல”**எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

**<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>**

**<u>தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு(NMMS), மார்ச் 2021– 2022</u>**

## <u>செய்திக் குறிப்பு</u>

தேசிய வருவாய் வழி மற்றும் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS Exam) **05.03.2022** **(சனிக்கிழமை)** அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாக **25.02.2022** பிற்பகல் முதல் பள்ளிகளுக்கான User ID, Password-ஐப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் : சென்னை – 600 006**

**நாள்: 24.02.2022**